

## பாடம் 2

**ஜனவரி 4-10**

# உடன்படிக்கை அன்பு

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 2பேதுரு 3:9; உபா 7:6–9; ரோமர் 11:22; 1யோவான் 4:7–20; யோவான் 15:12; 1யோவான் 3:16.

**மனன வசனம்:** இயேசு அவனுக்குப்பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். யோவான் 14:23.

அகாபே என்கிற கிரேக்க வார்த்தை தேவனுடைய அன்பைமட்டுமே குறிப்பதாகவும், பிலியோ எனும் அன்பு அகாபேயைவிடக் குறைந்ததரமான தாகவும் சிலர் நினைக்கிறார்கள். அகாபே என்பது ஒருமுனை அன்பு, அதாவது கொடுக்கமட்டுமே செய்கிற அன்பு என்று சிலர் நினைக்கிறார்கள்; மனிதர்களின் எதிர்வினை எதையும் எதிர்பார்க்காது என்று சொல்கிறார்கள்.

ஆனால் வேதாகமம் முழுவதிலும் தேவ அன்புபற்றி கவனமாக ஆரா யும்போது, இத்தகைய கருத்துகள் தவறானவை என்பது தெரிகிறது. முதலாவது, அகாபே என்கிற கிரேக்க வார்த்தை தேவனுடைய அன்பை மட்டுமல்ல, மனி தர்களின் அன்பையும், சிலசமயங்களில் தவறான திசையில் சென்ற அன்பை யுங்கூடக் குறிக்கிறது. 2தீமோ 4:10. இரண்டாவது, வேதாகமம் முழுவதிலும், தேவ அன்பைக் குறிப்பதற்கு அகாபே தவிர வேறு வார்த்தைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, 'பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்' என்று இயேசு சொன்னார். யோவான் 16:27. இங்கே சிநேகித்தல் என்பதற்கான கிரேக்க வார்த்தை பிலியோ; இது, மனித அன்பையல்ல, மனிதர்கள்மீது தேவன் காட்டுகிற அன்பைக் குறிக்கிறது. எனவே, பிலியோ என்பது குறையுள்ள அன்பையல்ல, தேவ அன்பையும் குறிக்கிற ஒரு வார்த்தை. மேலும், தேவ அன்பு ஒருமுனை அன்பல்ல, உறவு சார்ந்த ஒன்று. எனவே மனிதர்கள் தம்மீதும், பிறர்மீதும் திரும்ப அன்பு செலுத்துகிறார்களா என்பதில் தேவன் மிகுந்த அக்கறைகாட்டுகிறார்.

*2025, ஜனவரி 11 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனுடைய நித்திய அன்பு

தேவன் அனைவரையும் நேசிக்கிறாரென வேதாகமம் தெளிவாகச் சொல்கிறது. பிரபல வசனமான யோவான் 3:16, இந்த உண்மையை அறிவிக்கிறது: 'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.

**தேவனுடைய இரக்கம், மனதுருக்கம், காருணியம் ஆகியவற்றின் விசாலம்பற்றி சங் 33:5; சங் 145:8,9 வசனங்கள் சொல்வது என்ன?**

---

தாங்கள் அன்புக்கு பாத்திரவான்கள் அல்லர், தேவன் தங்களைத்தவிர மற்ற அனைவரையும் நேசிக்கிறார் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் ஒவ்வொரு தனி மனிதனையும் இயேசு நேசிப்பதாக வேதாகமம் சொல்கிறது. அவர் நேசிக்காத நபர் எவருமில்லை. தேவன் எல்லாரையும் நேசிப்பதால், எல்லாரும் இரட்சிக்கப்படவும் விரும்புகிறார்.

**தேவன் ஒவ்வொருவரையும் இரட்சிக்க விரும்புவதுபற்றி 2 பேதுரு 3:9; 1 தீமோத்தேயு 2:4; எசேக்கியேல் 33:11 வசனங்கள் சொல்வது என்ன?**

---

யோவான் 3:16க்குப் பிறகு வருகிற வசனம் இவ்வாறு சொல்கிறது: 'உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்' யோவான் 3:17. தேவன் நிர்ப்பந்திக்கிறவராக இருந்தால், ஒவ்வொரு மனிதரும் அவரது இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட வேண்டியதாக இருக்கும். ஆனால், தேவன் தம் அன்பை யார்மீதும் கட்டாயப்படுத்துவதில்லை. அதை ஏற்றுக்கொள்ளவோ புறக்கணிக்கவோ மனிதர்களுக்கு உரிமையுள்ளது.

சிலர் அதைப் புறக்கணித்தாலும்கூட, தேவன் அவர்களை நேசிப்பதை நிறுத்துவதில்லை. எரேமியா 31:3இல் தம் மக்களிடம் இவ்வாறு அறிவிக்கிறார்: 'ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்'. தேவ அன்பு என்றுமுள்ளது என்றே வேதாகமம் சொல்கிறது. சங் 136. தேவ அன்பு வற்றுவதே இல்லை. அது முடிவே இல்லாதது. மற்றவர்களை நேசிக்காமல் இருப்பது நமக்குக் கடினமாக இல்லாததால், இதைப் புரிந்துகொள்வது நமக்குக் கடினமாக இருக்கிறது அல்லவா?

ஆனாலும், அந்த அன்பின் எதார்த்தத்தை நாம் கற்றுக்கொள்ள முடியுமானால், அந்த அன்பை நம் வாழ்வில் அறிந்தோமானால், நாம் வாழ்கிற விதமும் மற்றவர்களை நடத்துகிற விதமும் எவ்வளவு வித்தியாசமாக இருக்கும்!

---

**தேவன் அனைவரையும் நேசிக்கிறாரென்றால், வெறுக்கவேண்டிய குணங்களை உடையவர்களையும் அவர் நேசிக்கிறார் என்றுதான் அர்த்தம்; ஏனென்றால் அத்தகைய குணமுடையவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்மீது தேவன் அன்புகாட்டுவது, அவர்களை நாம் அணுகவேண்டிய விதம்பற்றி என்ன கூறுகிறது?**

# உடன்படிக்கை அன்பு

குடும்பம் அல்லது சொந்தபந்தங்களை உருவகங்களாக வைத்து, தேவன் நம்மோடு வைத்திருக்கிற விசேஷித்த அன்பின் உறவை வேதாகமம் சித்திரிக்கிறது; குறிப்பாக ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் அல்லது ஒரு தாய்க்கும் பிள்ளைக்கும் இடையேயுள்ள உறவைவைத்து சித்திரிக்கிறது. தேவனுக்கும் அவரது உடன்படிக்கை மக்களுக்கும் இடையேயுள்ள விசேஷித்த உறவைச் சித்திரிக்க இந்த உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது உடன்படிக்கை அன்பின் உறவு; இதில் தேவன் தம் மக்கள்மீது வைத்திருக்கிற அன்பு மட்டுமல்ல, மக்கள் இந்த அன்பை ஏற்றுக்கொண்டு, திரும்ப அவர்மீதும் மனிதர்மீதும் அன்பு காட்டுவார்கள் என்கிற எதிர்பார்ப்பும் சம்பந்தப்பட்டுள்ளது.

**தேவன் உடன்படிக்கைகளைச் செய்வதற்கும், தேவனுடைய அன்பின் இரக்கத்திற்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி உபா 7:6-9 வசனங்கள் சொல்வது என்ன?**

---

தேவன் தம் உடன்படிக்கை மக்கள்மீது வைத்திருக்கிற ஒரு விசேஷித்த வகையான அன்புபற்றி உபா 7:9 விவரிக்கிறது; அந்த உறவு குறிப்பாக அவர்கள் தேவனுக்கு உண்மையாக இருப்பார்களா, இருக்கமாட்டார்களா என்பதைச் சார்ந்திருக்கிறது. தேவ அன்பு நிபந்தனையுள்ளது அல்ல; ஆனால் அவர் தம் மக்களோடு செய்துள்ள உடன்படிக்கை உறவு நிபந்தனைக்குரியது.

கெஸெட் என்கிற எபிரெய வார்த்தை உபா 7:9இல், 'தயவு' என்று வருகிறது; அது தேவ அன்பிலுள்ள உடன்படிக்கைரீதியான அம்சத்தைக் குறிக்கிறது. தேவனுடைய இரக்கம், தயவு, அன்பு ஆகியவற்றின் மகத்துவத்தை கெஸெட் குறிக்கிறது; பரஸ்பரம் பரிமாறிக்கொள்கிற அன்பில் நிலைமாறாமல் இருப்பதைக் குறிக்கிறது. அடுத்தவர் பதிலுக்கு அன்போடு நடப்பார் என்கிற எதிர்பார்ப்புள்ள உறவை இது துவக்குகிறது.

தேவனுடைய அன்பின் உடன்படிக்கை மிகவும் நம்பிக்கைக்குரியது; நிலையானது; நீடித்திருப்பது. அதேநேரம், அந்த கெஸெட்டின் நன்மைகளைப் பெறுவதென்பது மக்கள் கீழ்ப்படியமுடிவுசெய்வதையும், உறவில் தங்களுக்குரிய பொறுப்பை நிறைவேற்றுவதையும் சார்ந்தது. 2சாமு 22:26; 1இராஜா 8:23; சங் 25:10; சங் 32:10; 2நாளா 6:14.

தேவனுடைய மாறாத அன்புதான் எல்லா அன்பின் உறவுகளுக்கும் அடிப்படை; நம் அன்பு அந்த அன்புக்கு ஒருபோதும் ஈடாகாது. தேவன் நம்மை மனப்பூர்வமாக வாழவைத்திருப்பது மட்டுமல்லாமல், கிறிஸ்துவில் மனப்பூர்வமாக தம்மை நமக்குக் கொடுத்துமிருக்கிறார். 'ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை' யோவான் 15:13. கர்த்தர் 'மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே' தாழ்த்தினதுதான் தேவ அன்பின் மிகப்பெரிய வெளிப்பாடாக இருந்தது. பிலி 2:8.

---

**தேவ அன்பின் எதார்த்தத்தை என்னென்ன வழிகளில் நீங்கள் எப்போதும் உங்கள் சிந்தையில் வைத்திருக்கலாம்? அவ்வாறு செய்வது ஏன் முக்கியமானது?**

---

# நிபந்தனை உறவு

தம்மோடு ஒரு நெருக்கமான உறவு வைக்குமாறு ஒவ்வொருவரையும் தேவன் அழைக்கிறார். மத் 22:1-14. தேவனையும் மற்றவர்களையும் நேசிக்க வேண்டும் என்கிற தேவகட்டளைக்குக் கீழ்ப்படிவதுதான் இந்த அழைப்புக்கு இணங்க சரியான முறை. மத் 22:37-39. தேவனோடு இவ்வாறு உறவுவைத்து அதன் நன்மைகளை அனுபவிக்கிறோமா என்பது, அவரது அன்பை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோமா புறக்கணிக்கிறோமா என்பதைச் சார்ந்தது.

**தேவனுடைய அன்பினால் விளைகிற நன்மைகளைப் புறக்கணிக்கவும், அவற்றைப் பெறுகிற தகுதியை இழக்கவும் வாய்ப்புள்ளதா என்பதுபற்றி ஓசியா 9:15, எரே 16:5, ரோமர் 11:22, யூதா 21 வசனங்கள் சொல்வது என்ன?**

தேவனோடு அன்பின் உறவின் நன்மைகளை அனுபவிப்பது அவரது அன்புக்கு மனிதர்கள் காட்டுகிற எதிர்வினையைச் சார்ந்தது என்பதை இது போன்ற வசனங்கள் காட்டுகின்றன. ஆனாலும், ஒருவரை நேசிப்பதை தேவன் ஒரு கட்டத்தில் நிறுத்திவிடுவதாக நினைப்பது மிகப்பெரிய தவறு. தேவ அன்பு அநாதியானது. ஓசியா 9:15இல், ‘இனி அவர்களை நேசிக்கமாட்டேன்’ என்று தம் மக்கள்பற்றி தேவன் சொன்னாலுங்கூட, அந்தப் புத்தகத்தின் பின்பகுதியில் அவர்களைப்பற்றி தேவன், ‘அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்’ என்று சொல்கிறார். ஓசியா 14:4. தேவன் தம் மக்களை நேசிப்பதை முற்றிலும் நிறுத்துவதாக ஓசியா 9:15ஐப் புரிந்துகொள்ள முடியாது. மாறாக, தேவனோடான அன்பின் உடன்படிக்கையின் குறிப்பிட்ட சில நன்மைகள் அல்லது அம்சங்கள் நிபந்தனைக்குரியவை என்றுதான் புரிந்துகொள்ள முடியும்.

‘என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்’ யோவான் 14:21. அதுபோல இயேசு தம் சீடர்களிடம், ‘நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார்’ என்று சொல்கிறார். யோவான் 16:27.

தேவனோடான இரட்சண்ய உறவின் நன்மைகளைப் பெற்று அனுபவிப்பது, நாம் தேவ அன்பை ஏற்றுக்கொள்கிறோமா, அந்த அன்பைச் சுமந்துசெல்ல ஆயத்தமாக இருக்கிறோமா என்பதைச் சார்ந்ததென இதுபோன்ற வசனங்கள் காட்டுகின்றன. அதற்காக, தேவனுடைய அன்பு ஒரு கட்டத்தில் நின்றுவிடுகிறதென அர்த்தமில்லை. சூரியனைப் பிரகாசிக்கவிடாமல் செய்ய நம்மால் முடியாது, ஆனால், சூரிய கதிர்கள் நம்மீது படவிடாமல் செய்ய நம்மால் முடியும்; அதுபோலவே தேவனுடைய நித்திய அன்பைத் தடுத்து நிறுத்த நம்மால் எதுவும் செய்யமுடியாது, ஆனால் தேவனோடு உறவு வைப்பதை நாம் புறக்கணிக்கமுடியும்; அதன்மூலம் அதன் நன்மைகளைப் பெறுவதிலிருந்து, குறிப்பாக நித்திய வாழ்வின் வாக்குறுதியைப் பெறுவதிலிருந்து நம்மை விலக்கமுடியும்.

---

**மக்கள் தேவனுடைய அன்பை ஏற்றுக்கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால் என்னென்ன வழிகளில் அதை காணவும், அனுபவிக்கவும் முடியும்? உதாரணமாக, பாவத்திற்குப் பிறகும்கூட இந்த இயற்கை உலகம் எவ்வாறு அவரது அன்பை வெளிப்படுத்துகிறது?**

# பறிக்கப்பட்ட இரக்கம்

தேவ அன்பு நித்தியமானது; தகுதியவற்றவர்களுக்குக் காட்டப்படுவது. ஆனாலும் மனிதர்கள் அதைப் புறக்கணிக்கமுடியும். அந்த அன்பை ஏற்றுக் கொள்ளவோ புறக்கணிக்கவோ நமக்கு வாய்ப்பிருக்கிறது; அதற்கு காரணம், நாம் எதுவும் செய்வதற்கு முன்னரே தேவன் தம்முடைய பழுதற்ற, நித்தியமான அன்பால் நம்மை மனப்பூர்வமாக நேசிப்பதால்தான். எரே 31:3. நாம் கேட்பதற்கு முன்னரே தேவன் நம்மீது அன்புகூர்ந்ததாலே அவர்மீது அன்புகாட்ட முடிகிறது.

**1யோவான் 4:7-20ஐ, குறிப்பாக 7,19ஆம் வசனங்களை வாசியுங்கள். தேவ அன்பின் முக்கியத்துவம்பற்றி இது சொல்வது என்ன?**

எப்போதுமே தேவன்தாம் முதலில் நேசிக்கிறார். தேவன் முந்தி நம்மீது அன்புகூராவிட்டால், பதிலுக்கு நாம் அவர்மீது அன்புகூரமுடியாது. அன்புகூரவும் அன்புகூரப்படவும் திறனுள்ளவர்களாக தேவன் நம்மைச் சிருஷ்டித்திருப்பதால், தேவன்தாமே அந்த அன்பின் அடிப்படையும் ஆதாரமுமாக இருக்கிறார். ஆனாலும் அந்த அன்பை நாம் ஏற்றுக்கொள்வோமா, திரும்ப நம் வாழ்வில் அதைப் பிரதிபலிப்போமா என்பது நம் தீர்மானத்தைப் பொறுத்தது. மன்னிக்காத வேலைக்காரன்பற்றி கிறிஸ்து சொன்ன உவமையில் இந்த உண்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

அந்த உவமையில், அந்த வேலைக்காரன் தன் எஜமானிடம் வாங்கின கடனை அடைக்க வழியே இல்லாதிருந்தான். தன் எஜமானுக்கு 10,000 தாலந்துகள் கடன்பட்டிருந்தான். மத் 18. ஒரு தாலந்து 6000 டெனாரிக்குச் சமம். ஒரு டெனாரி என்பது, ஒரு சராசரி பணியாளருடைய ஒருநாள் ஊதியம். மத் 20:2. எனவே ஒரு தாலந்தைச் சம்பாதிப்பதற்கு அவருக்கு 6000 நாட்கள் ஆகிவிடும். விடுமுறை நாட்களைக் கழித்துவிட்டால், ஒரு சராசரி பணியாளர் வருடத்திற்கு 300 நாட்கள் வேலைசெய்தால், வருடத்திற்கு 300 டெனாரி சம்பாதிக்கலாம். எனவே ஒரு சராசரி பணியாளர் ஒரு தாலந்து கடனை அடைப்பதற்கு சுமார் 20 வருடங்கள் வேலைசெய்ய வேண்டியிருக்கும்; அப்போதுதான் 6000 டெனாரி கிடைக்கும் (6,000÷300 = 20). 10,000 தாலந்துகள் சம்பாதிப்பதற்கு 200,000 வருடங்கள் வேலை செய்தாகவேண்டும். சுருக்கமாக, அந்த வேலைக்காரன் அந்தக் கடனைச்செலுத்த வாய்ப்பேஇல்லை. ஆனாலும், அந்த எஜமான் வேலைக்காரன் மேல் மனதுருகி, அந்த மிகப்பெரிய கடனை மன்னித்தார்.

ஆனாலும் மன்னிக்கப்பட்ட இந்த வேலைக்காரன், தன் சகவேலைக்காரன் தன்னிடம் வாங்கியிருந்த 100 டெனாரி கடனை மன்னிக்க மறுத்து, அவனைச் சிறையில் தள்ளினபோது, அந்த எஜமான் கோபமடைந்தார்; தாம் இரக்கமாக வழங்கின மன்னிப்பைத் திரும்ப வாங்கினார். தன் எஜமான் வழங்கின அன்பையும் மன்னிப்பையும் அந்த வேலைக்காரன் இழந்தான். தேவனுடைய மனதுருக்கத்திற்கும் இரக்கத்திற்கும் முடிவில்லை என்றாலும், தேவனுடைய மனதுருக்கம், இரக்கத்தின் நலன்களை ஒருவர் புறக்கணிக்கமுடியும்; இழக்கமுடியும்.

---

**உங்களுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிற பாவங்களையும், உங்களை மன்னிக்க இயேசு கொடுத்த விலையையும் யோசித்துப் பாருங்கள். மற்றவர்களை மன்னிக்கவேண்டியதுபற்றி என்ன கற்றுக் கொண்டீர்கள்?**

# இலவசமாகப் பெற்றீர்கள்; இலவசமாகக் கொடுங்கள்

அந்த வேலைக்காரனுக்கு தன் எஜமானுக்குரிய கடனைச் செலுத்த வழியில்லாதிருந்ததுபோல, நாமும் தேவனுக்கு நம் கடனைச் செலுத்தவே முடியாது. தேவனுடைய அன்பைப் பணத்தாலோ, நம் தகுதியாலோ பெறமுடியாது. 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்'. ரோமர் 5:8. எத்துணை ஆச்சரிய அன்பு! 'நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரி(து)'. 1யோவான் 3:1.

ஆனால், நம்மால் முடிந்தவரை தேவனுடைய அன்பை மற்றர்களுக்குப் பிரதிபலிக்கலாம்; பிரதிபலிக்கவேண்டும். நாம் அத்துணை பெரிய மனதுருக்கத்தையும் மன்னிப்பையும் பெற்றிருந்தால், மற்றவர்களுக்கு மனதுருக்கத்தையும் மன்னிப்பையும் எவ்வளவாய் வழங்கவேண்டும்! அந்த வேலைக்காரன் தன் சகவேலைக்காரனுக்கு மன்னிப்பை வழங்கத் தவறியதால்தான் அவன் மன்னிப்பை இழந்தான். நாம் உண்மையிலேயே தேவனை நேசித்தால், அவரது அன்பை மற்றவர்களுக்குக் காட்டாமல் இருக்கமாட்டோம்.

**நாம் தேவன்மீது காட்டுகிற அன்பு, மற்றவர்கள்மீது காட்டுகிற அன்பு ஆகிய வைக்கும் தேவனுடைய அன்புக்கும் இடையேயுள்ள தொடர்புபற்றி யோவான் 15:12, 1யோவான் 3:16, 1யோவான் 4:7-12 ஆகிய வசனங்கள் என்ன சொல்கின்றன?**

யோவான் 15:12க்குப் பிறகு இயேசு தம் சீடர்களிடம், 'நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்' என்கிறார். யோவான் 15:14. இயேசு அவர்களுக்கு என்ன கட்டளையிட்டார்? தாம் அவர்களை நேசித்ததுபோல மற்றவர்களை அவர்கள் நேசிக்கவேண்டும் என்று சொன்னார்; நமக்கும் சொல்லியிருக்கிறார். தேவனையும் மற்றவர்களையும் நேசிக்கவேண்டும் என்றுதான் எல்லா இடங்களிலும் தேவன் சொல்கிறார்.

நம்மால் திரும்பச் செலுத்தவே முடியாத, எண்ணுக்கடங்காத கடன், நமக்காகச்சிலுவையில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் தேவனை நேசித்துப் போற்றவேண்டும்; மற்றவர்கள்மீது அன்போடும் கிருபையோடும் வாழவேண்டும். அதிகம் மன்னிக்கப்பட்டவன் அதிகமாக அன்புகூருவான், மாறாக 'எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான்'. லூக் 7:47. நாம் எவ்வளவுக்கு மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணராதவர் நம்மில் எவராவது இருக்கமுடியுமா?

தேவனில் அன்புகூருவதற்குநாம் மற்றவர்களிடம் அன்புகாட்டவேண்டும் என்றால்,தேவ அன்பின் செய்தியை நம் வார்த்தையாலும் செயலாலும் உடனடியாக அறிவிக்கவேண்டும். இவ்வுலகில், மக்களுடைய அனுதின வாழ்வில் அவர்களுக்கு உதவவேண்டும்; தேவ அன்பின் வாய்க்கால்களாக இருக்கவும், புதிய வானம் புதிய பூமியில் நித்திய ஜீவனைக் கொடுப்பதாக வாக்குரைத்திருப்பவரைக் காட்டவும் முயலவேண்டும்; தேவ அன்பைப் புறக்கணிப்பதின் கொடிய விளைவுகளான பாவத்தாலும் மரணத்தாலும் சிதைந்து, சீர்கெட்டுள்ள இந்த உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்று புதிய வானமும் புதிய பூமியுமாகும்.

---

**மற்றவர்களை நேசிப்பதன்மூலம் தேவனை நேசிப்பதற்கு குறிப்பிட்ட என்ன முயற்சிகளை நீங்கள் எடுக்கலாம்? மக்களுக்கு தேவ அன்பைக் காட்டவும், நித்திய ஜீவனின் வாக்குறுதியைப் பெற்று அனுபவிக்க அவர்களை அழைக்கவும் நீங்கள் என்ன செய்யலாம்?**

# மேலும் படிக்க:

'உங்கள் தேவைகள், சந்தோஷங்கள், துக்கங்கள், கவலைகள், பயங்கள் எல்லாவற்றையும் தேவனுக்குமுன்பாக வையுங்கள். உங்கள் பாரத்தைக்குறித்து அக்கறை இல்லாமல் இருப்பதில்லை. "கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராய் இருக்கிறாரே" யாக்கோபு **5:11.** நம் துன்பங்களால் அவர் உள்ளம் உருகுகிறது. கஷ்டம் என்று நாம் வாய் திறந்தால் போதும், அவருடைய அன்பின் இதயம் வேதனைப்படுகிறது. மனதைத் திகைக்கவைக்கிற எல்லாவற்றையும் அவரிடம் எடுத்துச்செல்லுங்கள். அவரால் தாங்கமுடியாதது எதுவுமே இல்லை; அவர் உலகங்களையே தாங்குகிறாரே. பிரபஞ்ச நிகழ்ச்சிகள் அனைத்தும் அவருடைய கட்டுப்பாட்டில்தானே உள்ளன. நமக்குச் சமாதானம் தருவது மிகச்சிறிதானாலும், அவர் பார்வையிலிருந்து தப்புவதில்லை. அவரால் கவனிக்க இயலாத அளவிற்கு நம் வாழ்க்கையின் எந்தப் பகுதியும் இருட்டில் இல்லை; அவரால் தீர்க்க இயலாத அளவிற்குச் சிக்கலான குழப்பம் எதுவும் இல்லை. நம் பரமபிதாவுக்குத் தெரியாமல், அவர் பிள்ளைகளில் மிகச்சிறியவரைக் கூட எந்த ஆபத்தும் அணுகமுடியாது; எந்தக் கவலையும் சித்திரவதை செய்யமுடியாது. மேலும், உங்கள் சந்தோஷ ஆரவாரமும் அவருக்குத் தெரியும்; உதடுகளின் உண்மையான ஜெபமும் தெரியும். "அவர் இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்" சங்கீதம் **147:3.** அவருடைய உன்னிப்பான கவனிப்பைப் பகிர்ந்துகொள்ள வேறொருவர் பூமியில் இல்லாததுபோல ஒவ்வொருவரையும் கவனிக்கிறார்; உங்கள் ஒருவருக்காகவே அவர் தம் பிரியகுமாரனைக் கொடுத்ததுபோல நடந்துகொள்கிறார். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவு இவ்வளவு தனிப்பட்டதாகவும் முழுமையானதாகவும் இருக்கிறது'.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

**1** *'அவருடைய உன்னிப்பான கவனிப்பைப் பகிர்ந்துகொள்ள வேறொருவர் பூமியில் இல்லாததுபோல ஒவ்வொருவரையும் கவனிக்கிறார்; உங்கள் ஒருவருக்காகவே அவர் தம் பிரியகுமாரனைக் கொடுத்ததுபோல நடந்துகொள்கிறார். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவு இவ்வளவு தனிப்பட்டதாகவும் முழுமையானதாகவும் இருக்கிறது' என்கிற மேற்கோளைக் கவனியுங்கள். இது என்ன ஆறுதலை நமக்குக் கொடுக்கவேண்டும், தேவன் நமக்கு நெருக்கமாகவும், நம்மீது அக்கறையாகவும் இருப்பதை அறிவது நம்மை எவ்வாறு வாழச்செய்ய வேண்டும்? அந்த அற்புதமான வாக்குறுதியின் எதார்த்தத்துடன் எவ்வாறு வாழப் பழகலாம்? அதை உண்மையிலேயே உங்களால் நம்பமுடிந்தால், ஒவ்வொரு நாளும் எப்படியிருக்குமென யோசித்துப்பாருங்கள்.*

**2** *இந்தவாரப் பாடத்தின் வெளிச்சத்தில் சங் 103:17,18ஐ எவ்வாறு புரிந்துகொள்ளலாம்? தேவ அன்பு நித்தியமானது என்பதையும், தேவனோடுள்ள உறவின் நன்மைகளை அனுபவிப்பது அவரது அன்பை நாம் ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பதைச் சார்ந்தது என்பதையும்பற்றி அது என்ன வெளிப்படுத்துகிறது?*

**3** *இதை அறிவது தேவனோடுள்ள உங்கள் உறவில் எவ்வாறெல்லாம் வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது? மற்றவர்களுடைய துக்கங்களைப்பற்றி நீங்கள் புரிந்துகொள்கிற விதத்தில் அது எவ்வாறு தாக்கத்தை உண்டாக்குகிறது?*

# வேதாகமத்தின் ஸிபு

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

மனிதனை தேவன் மண்ணிலிருந்து படைத்தாரா, மக்காசோளத்திலிருந்து படைத்தாரா என்று மெல்வினுக்கு சந்தேகமாக இருந்தது. 'தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்' என்று வாசித்திருந்தான். ஆதி 2:7. ஆனால், சுமார் 17,000 மக்கள் வாழ்கிற கோஸ்டா ரீகாவின் பழங்குடி இனத்தவர்களான கபேகார்கள், மனிதனை ஸிபு (அவர்கள் மொழியில் தேவன் என்று அர்த்தம்) மக்காச்சோளத்திலிருந்து படைத்ததாக அவனுக்குச் சொல்லிக்கொடுத்திருந்தார்கள்.

அவர்கள் பாரம்பரியத்தில் சொல்லப்படுகிற ஸிபுவும், வேதாகமத்தின் ஸிபுவும் ஒரே கடவுள்தான் என்று மெல்வின் யோசித்தான். ஆனால் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்று வேதாகமத்தை வாசி ஆரம்பித்தபிறகு, வேதாகமத்திலுள்ள ஸிபுவின் குணநலன்கள், பாரம்பரியத்தில் கற்பிக்கப்படுகிற குணநலன்களைவிட வித்தியாசமாக இருப்பதை அறிந்துகொண்டான். வேதாகமத்தின் ஸிபுவை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தான்; தன் பெற்றோராடும் உடன்பிறந்த இருவரோடும் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றான்.

ஒருவருடம் கழித்து, 40 வயதான அவனுடைய அம்மாவுக்கு வலிப்பு வந்து, மரித்துப்போனார். அப்போது 22 வயதாக இருந்த மெல்வின், சுயநினைவற்ற தூக்கம்தான் மரணம் என்று நம்பினான். ஆனால் கபேகார் பாரம்பரியம், அவனுடைய அம்மா உயிரோடு இருப்பதாகவும், அவரை அடுத்த உலகத்திற்குக் கொண்டுசெல்ல நான்கு நாள் சடங்கில் அவளது குடும்பத்தினர் பங்கேற்காவிட்டால், அவள் இருளில் தொலைந்துபோகக் கூடுமென்றும் கூறியது. அந்த அடக்க சடங்கின்படி, அவர்கள் இரண்டு பன்றிகளையும் மூன்று கோழிகளையும் பலியிட்டு, சடங்கில் கலந்துகொள்கிறவர்களுக்கு சாப்பாடுபோடவேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால், சுயநலவாதிகளெனக் கூறிவிடுவார்கள். சுயநலவாதிகள் அருவருப்பானவர்களென காபேகர் பாரம்பரியம் கூறியது. இருவீட்டு தாத்தா பாட்டியும், மற்ற உறவினர்களும் பயங்கர அழுத்தம் கொடுத்த போதிலும், மெல்வினும் அவனது குடும்பத்தினரும் வேதாகமத்தின்படி நடக்கத் தீர்மானித்தார்கள். காபேகர் பகுதியிலிருந்து வெளியே ஓர் இடத்தில் புதைப்பதற்கு அட்வென்டிஸ்ட் போதகர் உதவினார்.

அப்போதுதான் ஒரு போதகராகவேண்டுமென மெல்வின் தீர்மானித்தான். ஞானஸ்நானம் எடுத்த பிறகு, தேவன் தன்னை ஊழியத்திற்கு அழைப்பதாக உணர்ந்தான், ஆனால் அதற்கு ஒப்புக்கொடுக்கவில்லை. அவனுடைய அம்மா இறந்தபிறகு, தான் வாழ்கிற நாட்கசெல்லாம் வேதாகமத்தின் ஸிபுவை அறிவிக்கப்போவதாகத் தீர்மானித்தான். மக்களாச்சோளத்திலிருந்து மனிதனைப் படைத்ததாகச் சொல்லப்பட்ட ஸிபுவிடமிருந்து மண்ணிலிருந்து மனிதனைப் படைத்த வேதாகமத்தின் தேவனிடம் தன் மக்களை வழிநடத்த விரும்பினான்.



இன்று, 24 வயதாகும் மெல்வின மேட்ரிஸ், கோஸ்டா ரீகாவில் உள்ள சென்ட்ரல் அமெரிக்கா அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் படித்து வருகிறார். படித்து முடித்த பிறகு, காபேகர் இனத்தைச் சேர்ந்த முதல் அட்வென்டிஸ்ட் போதகராக இருப்பார்.